## ஒதுக்கீட்டுத் தலைப்பு 133 – தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஆ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 1.4 முதல் 1.7 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

மீளாய்வாண்டில் அமைச்சிற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 3,189,301,486 ஆக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 2,182,739,450 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 1,006,562,036 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 31.56 சதவீதமாக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிப்பட்ட நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழும் | 1,149,000,000 | 1,149,000,000 | 91,234,757 | 7.9 |
| மூலதன | 2,027,000,000 | 2,040,301,486 | 915,327,279 | 44.86 |
| மொத்தம் | 3,176,000,000 | 3,189,301,486 | 1,006,562,036 | |

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

(i) 07 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 25,650,000 தொகையான முழு ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 87 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 05 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிபொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது அடுத்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டத்தினை அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 – 2014 காலப்பகுதிக்காக 2012 செப்தெம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட வரைவு கூட்டிணைந்த திட்டம் 2013 யூன் மாதம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மொனராகல, புத்தலவில் நடைபெற்ற ‘‘தெயட கிருல’’ தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக் கொட்டகை நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 2,797,000 பெறுமதியான பலகைகள் மற்றும் இரும்பு போன்ற மூலப்பொருட்கள் அவைகளை வழங்கியவர்களாலேயே அகற்றுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை மற்றும் அக் கிரயத்தில் ஏதாவது சதவீதத்தை அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியை அறவிடுவதற்கு உடன்படிக்கையில் ஒரு பகுதி உள்ளடக்கப்படாமையினால் அரசாங்கத்திற்கு பெறக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வு

(அ) நி.பி. 756 மற்றும் 507(1) இன் பிரகாரம் அமைச்சின் கீழ் பராமரிக்கப்படுகின்ற 260 விதாத நிலையங்களில் 50 இற்கு வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ஊடகப் பிரிவில் 28 பொருட்களுக்கான பேரேட்டிலும் உள்ளவாறான மீதியிலும் ஒரே பெறுமதியாகவும் இருந்த போதிலும் உள்ளவாறான மீதி மிகையாக மெய்மையாய்வுச் சபையினால் பிழையாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பின்வரும் பொருட்களில் பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் அவை பற்றாக்குறையாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| பிரிவு | பொருள் | பற்றாக்குறை |
|---|---|---|
| அமைச்சருடைய அலுவலகம் | அலுமாரி | 01 |
| | தொலைபேசி | 02 |
| | பிளாஸ்டிக் கதிரை | 10 |

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கையும்**

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 14 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 04 | – |
| (iii) | இரண்டாம் நிலை | 770 | 688 | 82 |
| (iv) | ஆரம்ப நிலை | 232 | 229 | 03 |
| | | 1,029 | 935 | 94 |

மீளாய்வாண்டின் இறுதிலுள்ளவாறு 94 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.